Registered as a News Paper பக்கங்கள் 06 விலை ரூபா [illegible]

# ஈழநாதம்

THE EELANAATHAM Peoples Daily மக்கள் இனசரி

நாதம்: 02 திருவள்ளுவர் ஆண்டு 2022 கார்த்திகை 06 (22 - 11 - 1991) வெள்ளிக்கிழமை ஓசை: 277

## 1990 க.பொ.த.சா. மாணவர் இழப்பைத் தடுக்க நடவடிக்கை

1990 ஆம் ஆண்டு க. பொ. த. (சாதாரணம்) பரீட்சைக்குத் தோற்றவேண்டிய மாணவர்கள் 91 ஆம் ஆண்டுப் பரீட்சைக்குத் தோற்றுகின்றபோதிலும் இவர்களுக்கு ஒரு வருடம் இழப்பு ஏற்படாத வகையில் 93ஆம் ஆண்டு ஆகஸ்ட்மாத க. பொ. த(உயர்தரம்) பரீட்சைக்குத் தோற்ற அனுமதி வழங்கப்படும். இத் தகவலை பரீட்சை ஆணையாளர் ஆ்தர் வெதமுல்ல தெரிவித்தார். இதேவேளை யாழ். மாவட்டத்தில் ஆசிரிய கலாசாலை (4 ஆம் பக்கம் பார்க்க)

# தொண்டா விரைவில் யாழ். வருவார்

## போர் நிறுத்தம், பொருளாதாரத் தடை: முதற்கட்ட பேச்சில் முக்கிய இடம்

(யாழ்ப்பாணம்)

விடுதலைப்புலிகளுடன் ஆரம்பப் பேச்சுக்களை நடாத்துவதற்கு அமைச்சர் தொண்டமான் விரைவில் யாழ்ப்பாணம் வரவிருக்கிறார். அவர் இந்தியாவிலிருந்து திரும்பியதும் இதற்கான திகதி நிர்ணயிக்கப்படுமெனத் தெரிகிறது.

திரு. தொண்டமானுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நடைபெறும் முதற்கட்டப் பேச்சின்போது போர் நிறுத்தம், பொருளாதாரத் தடை என்பன குறித்து விவாதிக்கப்படுமென நம்பகரமான வட்டாரங்களிலிருந்து தெரிய வருகிறது.

திரு தொண்டமான் கொழும்பு திரும்பியதும் ஜனாதிபதி பிரேமதாசாவுடனும் எதிர்க்கட்சித் தலைவி சிறிமாவோ பண்டாரநாயக்காவுடனும் ஏனைய சிங்களத் தலைவர்களுடனும் ஒரு சுற்றுப் பேச்சுக்களை நடத்தி விட்டு யாழ். வருவதற்கான திகதி பற்றிப் புலிகளுடன் கலந்தாலோசிப்பார் எனத் தெரியவருகிறது.

அரசியல் தீர்விற்கான வழி



### இலவசஇணைப்பு

1982 தொடக்கம் மண்மீட்புக்காய்உயிர் நீத்த மாவீரர்களின் குறிப்பேடு இணைக்கப்பட்டுள்ளது.

## மக்கள் கருத்து எழுத்துமூலம் தெரிவுக் குழு கோருகின்றது.

வடகிழக்கு மாகாணங்களுக்கு அதிகாரத்தை பரவலாக்குவது தொடர்பான விட போராட்டத்தில் ஈடுபட்டுள்ள இளைஞர்களும் கொல்லப்படுவதை தடுப்பதற்காகவும் நாடு பிளவுபடுவதை தடுப்பதற்காகவும், தேசிய கலாசா (4 ஆம் பக்கம்பார்க்க)

## தமிழ்நாட்டில் முன்னாள் உள்துறைச்செயலர் கைது

(சென்னை)

தமிழக அமைச்சின் முன்னாள் உள்துறைச்செயலாளர் ஆர். நாகராஜன் பயங்கரவாத தடுப்புச்சட்டத்தின்கீழ் நேற்று அதிகாலை கைது செய்யப்பட்டுள்ளார் என தமிழகக் காவல்துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

சென்னையிலுள்ள அவரது இல்லத்தில் கைது செய்யப்பட்ட நாகராஜன், திருச்சியில் இரு தினங்களுக்கு முன்பு இச்சட்டத்தின்கீழ் கைதுசெய்யப்பட்ட இருஇலங்கைத்தமிழ் (4ஆம் பக்கம் பார்க்க)

## இரு இல. தமிழர் கைது; விசாரணையில் திருப்பம்

ராஜீவ் காந்தி கொலை தொடர்பாக இரு இலங்கையர் கைது செய்யப்பட்டதைத் தொடர்ந்து இவ் விசாரணையில் புதுத் திருப்பம் ஏற்பட்டுள்ளதாக விசேட புலனாய்வுப் பிரிவு தெரிவித்துள்ளது.

இவர்கள் இருவரும் கைது செய்யப்பட்டதைத் தொடர்ந்து மேலும் பலர் கைது செய்யப்படலாம் என்றும் இவர்கள் இருவரும் சாந்தன், காந்தன் ஆகிய இருவரினதும் நெருங்கிய கூட்டாளிகள் என்றும் இவர்களிடம் இருந்து 200 கிலோ வெடிமருந்து, மற்றும் ஆவணங்கள், உபகரணங்களும் கைப்பற்றப்பட்டுள்ளதாகவும் விசேட புலனாய்வுப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

## பிரபாகரன் உறவினர்கள் இருவர் தமிழகத்தில் கைது

விடுதலைப் புலிகளுக்கு புகலிடம் அளித்ததற்காகவும், ஆயுதங்களை திரட்டுவதற்கு வசதிகள் செய்துகொடுத்ததற்

யம் உட்பட தற்போதைய பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணும் வழிகள் பற்றி பொது மக்களிடம் இருந்து எழுத்து மூலமான கருத்துக்களை பெற்றுக் கொள்வது என்று நேற்று முன்தினம் கூட்டப்பட்ட பாராளுமன்றத் தெரிவுக்குழுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

இக்கூட்டம் பாராளுமன்ற தெரிவுக் குழுவின் தலைவர் மங்கள முனசிங்க தலைமையில் நடைபெற்றது.

அப்பாவி பொது மக்களும், ஆயுதப் படையினரும்

# தேசிய கொடி ஏற்றம்; அணிவகுப்பு, மாவீரர் வாரம் சிறப்புற ஆரம்பம்

தமிழீழத்தின் தேசியக் கொடியேற்றலுடன் நேற்று வடபகுதியெங்கும் மாவீரர் வாரம் ஆரம்பமானது. இதை தொடர்ந்து மாவீரர்களுக்கு மௌனாஞ்சலி செலுத்தப்பட்டது.

மாவீரர் வார சிறப்பு நிகழ்ச்சியாக மட்டக்களப்பு, அம்பாறை தொடர்பகத்தினர் ஏற்பாடு செய்த விடுதலைப் புலி போராளிகளின் அணிவகுப்பு மரியாதை யாழ். இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

மாவீரர் ஆரம்ப நாளான நேற்று விடுதலைப்புலிகளின்

(6 ஆம் பக்கம் பார்க்க)

...விடம் அளித்ததற்காகவும், வசதிகள் செய்துகொடுத்ததற்காகவும் விடுதலைப்புலிகள் இயக்கத் தலைவர் வே. பிரபாகரனின் இரண்டு உறவினர்களை தமிழக காவல் துறையினர் கைது செய்துள்ளனர் என அறிவிக்கப்பட்டுள்ளது.

சமீபத்தில் கைப்பற்றப்பட்ட கப்பலில் கண்டு எடுக்கப்பட்ட குறிப் பேடுகளில் ஆனந்தராஜ் தேவகிகாமணி ஆகிய இருவரின் பெயர்களும் முகவரிகளும் காணப்பட்டதாக இந்தியப் பத்திரிகைகள் அறிவித்துள்ளன.

## இடதுசாரிகளின் தவறினால் தமிழினம் தனியே போராடுகிறது

### விக்கிரமபாகு கருணாரத்தினா

(கொழும்பு)

"வட-கிழக்கில் தமிழ் மக்களின் போராட்டத்தை உணர்ந்து அதற்குப் பங்கம் ஏற்படாதவாறு முஸ்லிம் மக்கள் செயல்பட வேண்டும். முஸ்லிம்களின் போராட்டம் தமிழர்கள் தங்கள் உரிமைகளை வென்றெடுக்கத் தக்கதாக இருக்க வேண்டும். முஸ்லிம்களின் போராட்டம் தமிழருக்கு எதிராக அமையக் கூடாது."

இவ்வாறு நவசமசமாஜக் கட்சியின் பொதுச் செயலாளர் விக்கிரமபாகு கருணாரத்தின கொழும்பில் இடம் பெற்ற கருத்தரங்கொன்றில் பேசும்போது தெரிவித்தார்.

தொடர்ந்து பேசிய அவர் நாங்கள் தமிழ் மக்களின் சுய நிர்ணய உரிமையை அங்கீகரிக்கின்றோம். இந்நாட்டு சிங்கள மக்களுடன் இணைந்து வாழ்வதா, இல்லையா?

(4 ஆம் பக்கம் பார்க்கவும்)

## மாவீரரை கௌரவிப்பதில் மக்கள் பேரார்வம்

மாவீரர் வாரத்தின் தொடக்க நளான நேற்று யாழ். குடாநாடே அலங்காரம் பெற்றுத் திகழ்ந்தது. மக்கள் மாவீரரைக் கௌரவிப்பதில் பேரார்வத்துடன் செயற்பட்டனர். வீதிகளில், பொது இடங்களில் பாடசாலைகளில் மற்றும் அரச தனியார் அலுவலகங்க

(3 ஆம் பக்கம் பார்க்க)

**நாளை வெளிவரும்**

(யாழ்ப்பாணம்)

தமிழீழமீட்புநிதி கடன் மீளளிப்பு செய்யப்படவுள்ளோரின் இலக்கங்கள் நாளை வெளிவரும்.

## சிங்கபுரவில் ஆயுதங்கள் மீட்பு; 2 ராணுவத்தைக் காணவில்லை

### பாரிய இம்மோதலில் புலிகள் தரப்பில் சேதமில்லை

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள குவாட்டஸ் இராணுவ முகாமில் இருந்து, பொலநறுவை மாவட்டத்தைச் சேர்ந்த சிங்கபுர நோக்கி ரோந்து சென்று கொண்டிருந்த இராணுவத்தினர் மீது நேற்று முன்தினம் விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதலில் இருவது இராணுவத்தினர் உயிரிழந்தது தெரிந்ததே. ரோந்து சென்ற இராணுவ அணியில் முப்பத்தைந்து இராணுவத்தினர் இருந்தனர். உயிரிழந்தோர் தவிர ஏனையோர் படுகாயமடைந்துள்ளனர்.

சிங்கபுர நோக்கி சென்று

(6 ஆம் பக்கம் பார்க்க)

## இழந்த உரிமையை மீட்க அனைவரும் பங்களிக்க வேண்டும்

### துணைவேந்தர் துரைராசா

(யாழ்ப்பாணம்)

"எமது இனத்தின் இழந்த உரிமைகளும், தனித்துவமும் பாதுகாக்கப்படவேண்டுமென்றும், விடுதலை வென்றெடுக்கப்படவேண்டும் என்பதற்காகவும் தீரமுடன் போராடி தியாக மரணமடைந்த போராளிகளின் உயர்ந்த இலட்சியத்தை நிறைவேற்றுவதற்காக நாம் அனைவரும் எவ்வித வேறுபாடுகளுமின்றி இணைந்து எம்மால் இயன்ற பங்களிப்பினைச் செய்யவேண்டும். இதுவே நாம் மாவீரர்களுக்குச் செய்யும் சிறந்த அஞ்சலியாகும்" இவ்வாறு நேற்று யாழ். பல்கலைக்கழக மறுமலர்ச்சிக் கழகத்தில் நடைபெற்ற மாவீரர் நாள் ஆரம்ப நிகழ்ச்சியில் கலந்துகொண்டு உரை நிகழ்த்திய யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் திரு. அ. துரைராஜா கூறினார்.

(4 ஆம் பக்கம் பார்க்க)

## மீட்பு நிதி திரட்ட ஏற்பாடு

காரைநகரிலிருந்து இடம்பெயர்ந்து வேறிடங்களில் வதிவோரிடமிருந்து 30 11.91 சனிக்கிழமை காலை 9 மணிக்கும் 11 மணிக்கும் இடையில்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## மாவீரர் வாரத்தையிட்டு புலிகள் தாக்கலாம்

### சிறிலங்காஇராணுவதரப்பு எச்சரிக்கை

வடக்கு-கிழக்கு மாகாணத்தில் விடுதலைப் புலிகள் மாவீரர் வாரம் கொண்டாடுவதைத் தொடர்ந்து இராணுவத்தினர் மீது புதிய கடும் தாக்குதல்களில் இறங்கிவிடலாம் என இராணுவத் தரப்பில்

(3 ஆம் பக்கம் பார்க்க)

+ [illegible Tamil handwriting] merge under one polity or elect to remain otherwise [illegible]

## நீமியா உரம்

பருவம் தப்பிய உரம் பயிருக்குப் பாதகம் விளைவிக்கும். வேம்பிலிருந்து தயாராகும் நீமியா உரம், பயிருக்கு ஊட்டம் அளித்து, பூச்சி, புழுக்கொல்லியாகவும் உதவுகிறது நீமியாஉரம் அண்ணா கோப்பி கடைகளிலும் கிடைக்கும். "மில்க்வைற்"

[B/3495]

## 6000 தொண்டர்

## ஆசிரியர் நியமனம்

கல்விச்சேவை ஆணைக்குழு 6000 பேரைத் தொண்டர் ஆசிரியர் சேவைக்குத் தெரிவு செய்துள்ளது. மொத்தம் 25,000 விண்ணப்பங்களிலிருந்தே இவர்கள் தெரிவு செய்யப்பட்டனர். தேவையான தகைமைகள் இல்லாமையால் 13,000 விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. அதிபர்களும், அரசியல்வாதிகளும் தமக்குத் தனிப்பட்ட முறையில் தெரிந்தவர்களின் பெயர்களையும் அனுப்பியுள்ளதாகக் கல்விச் சேவை ஆணைக்குழு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

மேலும் கிராமப் பகுதிகளிலுள்ள பாடசாலைகளில் சேவை செய்வதற்கென 6 000 தொண்டர் ஆசிரியர்கள் நியமனம் செய்யப்படவுள்ளனர்.

## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி



வேங்கையின் ஜனனம்
22-01-1972

வெற்றியில் மரணம்
22-11-1990

### 2 ஆம் லெப். சுபோ (சுமதி)

தமிழகம் மீட்பதற்காய்
தலைவன் பாதையில் சுவடுகள் பதித்து
மாநிலத்தின் விடுதலைக்காய்
மாவீரர் ஆனவளே — உன்
சரத்து ஆயுதம் இன்னும் கூட
எதிரி வாசலில்
எழுந்து வெடிக்கின்றது
உன் மனத்து இலட்சியங்கள் — இன்னும்
உணர்வுடன் ஒலிக்கின்றது

22-11-1991 இன்று எமதில்லத்தில் நடைபெறுகின்ற அன்னாரின் ஓராண்டு நினைவஞ்சலிக் கிரியைகளில் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

மட்டுவில் வடக்கு, — சகோதரர்கள்
சாவகச்சேரி (R/1937)

## மாவீரர் தின விழா

இடம்: புதிய உயர் கல்லூரி
காலம்: 22 . 11 . 1991 (வெள்ளி 3 மணி)

### நிகழ்ச்சி நிரல்

★ தமிழ்த்தாய் வணக்கம் ★ மாவீரர்அஞ்சலி
★ தலைமை உரை ★ சிறப்புரைகள்
★ புரட்சிகானம் (வி. பு. ம. மு. உறுப்பினர்கள்)
★ வில்லுப்பாட்டு (ஆசிரியர்கள்) ★ நாடகம் (மாணவர்கள்)
★ பட்டிமன்றம்

"சிறிலங்கா பேரினவாத அரசின் பொருளாதாரத் தடையை வெற்றிகொள்ளும் வலிமையை மக்கள் 'அடைந்துவிட்டனர்—அடைந்துவிடவில்லை'

நடுவர்
அ. குமாரவேல் அவர்கள்

| அடைந்துவிட்டனர் | அடைந்துவிடவில்லை |
| --- | --- |
| திரு வரதராஜன் | திரு. கலாகரன் |
| திரு. செல்வவடிவேல் | திரு. நாகநாதன் |
| திருமதி மீரா | திரு ரவீந்திரன் |

★ நாட்டுக்கூத்து (ஆசிரியர்கள், மாணவர்கள்).

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

- நிர்வாகம்

[B-8510]

## நினைவு கூருகின்றோம்...

1991 - 11 - 22





2ஆம் லெப். வைதேகி (சிதாலக்சுமி சின்னத்தம்பி-புலோலிமேற்கு, தம்பசிட்டி)
ரசிக்கா (யாழினி சத்தியநாதன் - 9/6, மகேந்திரன் வீதி, அரியாலை)
கோமகள் (சித்திரா சிவானந்தம் - கப்புது, கரவெட்டி)
2ஆம் லெப். கிரிஜா (இரத்தினவதி சுந்தரம் - இமையாணன், உடுப்பிட்டி)
சுதா (சுதர்மினா செல்வரட்ணம் - மாமுனை, முள்ளியவளை)
தமிழ்ச்செல்வி (சுமங்களா சதாசிவம் - அக்கரைப்பற்று)
கோணேஷ் (பேபிசுகிலா சுப்பையா - பாரதிபுரம், கிளிநொச்சி)
2ஆம் லெப். பொன்னி (பிரமிளா செல்வமாணிக்கம் - பொலிகண்டிச்சந்தி, வல்வெட்டித்துறை)
கப்டன் வதனன் (தமிழரசா ராஜேஸ்வரன் (சிறீ)- குமுழமுனை, மணலாறு)



(சுதா)



(ரசிக்கா)

1984 ஆம் ஆண்டு இதேதினத்தில் மட்டக்களப்பு, கருநாவலைப் பகுதியில் சிறிலங்காப் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட தமிழ் இளைஞன்
1987 ஆம் ஆண்டு சாவகச்சேரி பேருந்து நிலையத்தின் மீது சிறிலங்காப் படையினர் மேற்கொண்ட விமானத் தாக்குதலின் போது காயமுற்றிருந்து வீரச்சாவெய்திய
அசோக் / யூட் (மயில்வாகனம் சந்திரசேகர் - தெல்லிப்பளை)
1988 ஆம் ஆண்டு கைதடிப் பாலத்தில் இந்தியப் படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போது சயனைற் உட்கொண்டு வீரச்சாவெய்திய
பரிதா / துர்க்கா (பரஞ்சோதி சுகுமார் - நாவற்குழி சந்தி, நாவற்குழி)
வவுனியாவில் தேசவிரோதிகளால் சுட்டுக் கொல்லப்பட்ட எமது ஆதரவாளர் பூலோகசிங்கம்
பாவற்குளம், 4 ஆம் படிவப் பகுதியில் இந்தியப் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட எமது ஆதரவாளர் ந. பாலகுரு
1990 ஆம் ஆண்டு மாங்குளத்தில் சிறிலங்கா படையினரின் முகாம் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலின் போது வீரச்சாவெய்திய
2ஆம் லெப். சுபோ (சுமதி கந்தையா - மட்டுவில் வடக்கு, சாவகச்சேரி)
கப்டன் றஜனி (பரமேஸ்வரி சமிகரப்பிள்ளை - அலைக்கல்லுபோட்டகுளம், ஓமந்தை, வவுனியா)
கப்டன் டோறா (பத்மாவதி கந்தப்பு - 'சரி இல்லம்' உச்சில் ஒழுங்கை, கரவெட்டி)
மரிஸ்ரெலா (ஜெனோ பிரான்சிஸ் - முள்ளியான், வெற்றிலைக்கேணி)
டயானா (கவிதா தம்பிராசா - குகன் தோட்டம், அளம்பில், மணலாறு)
வெனாசிர் (ஜமுனா சிவபாதலிங்கம் - 5ஆம் கட்டை, அளம்பில், மணலாறு)
விக்ரோறியா (புஷ்பறியாணி அன்ரன் - ஊறணி, ஊரிக்காடு, மயிலிட்டி)
2ஆம் லெப். மாரியாச்சி (அருள்மொழி (சிந்தனா) குணசிங்கம் - 16/2, இல்லர் ஒழுங்கை, யாழ்ப்பாணம்)
2ஆம் லெப். இலக்கணா (பிறேமினி பாலசச்சந்திரன் - நுணாவில் கிழக்கு, கல்வயல், சாவகச்சேரி

கப்டன் …தன் …
2ஆம் லெப். அருணா (அந்தோனிப்பிள்ளை வில்வறாஜ் - அளம்பில், மணலாறு)
லிங்கம் (முத்துலிங்கம் சோதிவேல் - 2/4, வட்டக்கச்சி, கிளிநொச்சி)
மேஜர் திலீப் (அழகுரத்தினம் விக்கினேஸ்வரன் - கனகராயன்குளம், ஓமந்தை, வவுனியா)
அர்ச்சுனன் (மயில்வாகனம் ரவி - கிளிநொச்சி)
றூபன் (சிவசாமி குமாரவேல் - விசுவமடு, முல்லைத்தீவு)
துஸ்கர் (கிருஷ்ணசாமி இலட்சுமணன் - கிளிநொச்சி)
2ஆம் லெப். நிறாஜ் (செல்வத்துரை சிவநேசச்செல்வன் - நெடுங்கேணி, மணலாறு)
அன்பழகன் (மாயாண்டி பாலகிருஷ்ணன் - ஒட்டிசுட்டான், முல்லைத்தீவு)
2ஆம் லெப். மகான் (பாலசுந்தரன் பாலவரதன் - முள்ளியவளை, முல்லைத்தீவு)
2ஆம் லெப். நாதன் (சின்னத்தம்பி ரவீந்திரன் - கிராஞ்சி, பூநகரி)
கண்ணன் (சுப்பையாதேவர் துரைராஜா, - பொன்னகர், கிளிநொச்சி)
விசு (வேலு சித்திரகுமார் - கிளிநொச்சி)
லோகன் (இரத்தினசிங்கம் புவனேந்திரன் - கிளிவெட்டி, மூதூர். திருக்கோணமலை)
2ஆம் லெப். அலன் (செபஸ்தியான் கமலவோஜன் - 5 ஆம் வட்டாரம், உடப்பு)

பிரபு
நிர்மல் (சந்தியாப்பிள்ளை சுஜீந்திரறூபன் பெரியநொச்சிக்குளம், நேரியகுளம்)
தனறாஜ் (சி. ஆனந்தறாஜ் - ஒட்டிசுட்டான்)
பிரதீப் (ஆனந்தறாஜ் - மணற்குடியிருப்பு)
டெனி (நாகமணி குருகுலகுமார் - பூவரசங்குளம், வவுனியா)
2ஆம் லெப். டெனி (நடராசா உருத்திரமூர்த்தி - நொச்சிக்குளம், பன்குளம், திருக்கோணமலை)

கரன் (ச. நவரத்தினம் - அளம்பில், மணலாறு)
றமணன் (யோசப் ஜெயரட்ணம் - பிரமந்தனாறு, விசுவமடு, முல்லைத்தீவு)
2ஆம் லெப். ஐஸ்ரின் (மாணிக்கம் மானில் - கல்மடு, புளியங்குளம், வவுனியா)
சாவகச்சேரி சங்கத்தானைப் பகுதியில் சிறிலங்காப் படையினர் விமானம் மூலம் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் கொல்லப்பட்ட தமிழ்ப் பொதுமகள்

## ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்

## விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி

(B/8506)

# பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு

## உத்தேச இணைந்த பல்கலைக்கழகக்கல்லூரிகளில்

## மாணவர் அனுமதி-1991

1. 1989 டிசெம்பர், 1988 ஆகஸ்ட், 1987 ஆகஸ்ட் ஆகிய ஆண்டுகளில் நடைபெற்ற க. பொ. த. (உயர்தர) பரீட்சைகளில் பல்கலைக்கழக அமைதிக்கான ஆகக் குறைந்த தேவைகளைப்பூர்த்தி செய்யும் பரீட்சார்த்திகளிடமிருந்து, உத்தேச இணைந்த பல்கலைக்கழகக் கல்லூரிகளில் அனுமதிப்பதற்கான விண்ணப்பங்களை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு ஏற்றுக் கொள்ளும்.

### 2. அனுமதிக்கான ஆகக் குறைந்த தேவைகள்

உத்தேச இணைந்த பல்கலைக்கழகக் கல்லூரிகளுக்கு மாணவர் ஒருவர் அனுமதி பெறுவதற்கு தகைமையுடையவராக இருக்க வேண்டுமாயின்;

(1) (அ) க. பொ. த. (உயர்தர) பரீட்சையில் ஒரே முறையில் அங்கீகரிக்கப்பட்ட நான்கு பாடங்களிற் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

அல்லது

(ஆ) க. பொ. த. (உயர்தர) பரீட்சையில் ஒரே முறையில் அங்கீகரிக்கப்பட்ட மூன்று பாடங்களிற் சித்தி பெற்றிருப்பதுடன் அங்கீகரிக்கப்பட்ட நான்காவது பாடத்தில் 25% புள்ளிகளுக்கு குறையாமலும் பெற்றிருத்தல் வேண்டும்.

அத்துடன்

(ii) நான்கு பாடங்களிலும் மொத்தத்திரட்டு 180 புள்ளிகளுக்குக் குறையாமற் பெற்றிருத்தல் வேண்டும்.

மூன்றுதடவைகளுக்கு மேல் க. பொ. த. (உயர்தர) பரீட்சையை எடுத்திருந்தால் அவர் அனுமதிக்குத் தகைமையற்றவராவார்.

3. பல்கலைக்கழகமொன்றில் அல்லது பல்கலைக்கழகக்கல்லூரியொன்றில் பதிவு செய்யப்பட்டவரான அல்லது கற்கை நெறியெதனையும் பின்பற்றுகின்றவரான அல்லது மொரட்டுவ பல்கலைக் கழகத்தில் தேசிய தொழிநுட்பவியல் திப்புளோமாவிற்கு இட்டுச் செல்லும் பயிற்சி நெறிக்கு பதிவு செய்தவரான மாணவரொருவர் இணைந்த பல்கலைக்கழகக் கல்லூரிகளுக்கான அனுமதிக்கு விண்ணப்பிக்க அனுமதிக்கப்பட மாட்டார்கள். அத்தகைய மாணவர்கள் விண்ணப்பிக்கக் கூடாது.

4. சகல விபரங்களையும் கொண்ட, முழுமையான முன்வைக்கப்பட்ட கற்கை நெறி அட்டவணை கீழே தரப்பட்டுள்ளது. ஒவ்வொரு பரீட்சார்த்தியும் அனுமதி கோரும் கற்கை நெறியையும் இணைந்த பல்கலைக்கழகக் கல்லூரிகளையும் தெளிவாக விண்ணப்பத்தில் குறிப்பிட வேண்டும். ஒரு பரீட்சார்த்தி ஒன்றுக்கு மேற்பட்ட கற்கை நெறிகளுக்கோ அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட கல்லூரிகளுக்கோ விண்ணப்பிக்க விரும்பினால் அவரின் விருப்பத்திற்கமைய கல்லூரிகளையும், கற்கை நெறிகளையும் முன்னுரிமை ஒழுங்கில் நிரற்படுத்த வேண்டும். விண்ணப்பிக்கப்பட்ட பின் இவ் முன்னுரிமை ஒழுங்கில் மாற்றம் செய்ய அனுமதிக்கப்பட மாட்டாது.

5. இணைந்த பல்கலைக்கழகக் கல்லூரி ஒன்றில், கற்கை நிகழ்ச்சித்திட்டம் ஆரம்பிப்பதில் தாமதம் எதுவும் ஏற்படினும், கல்லூரிகளுக்கிடையில் இடமாற்றம் எதுவும் அனுமதிக்கப்பட மாட்டாது.

6. ஒவ்வொரு விண்ணப்பமும் கீழேதரப்பட்ட மாதிரி விண்ணப்பப் படிவத்தைப் போன்று வடிவமைக்கப்பட்டு பதிவுத் தபாலில் செயலாளர், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு, 20, உவாட் இடம், கொழும்பு-07 என்ற முகவரிக்கு 1991-11-23 ஆந் திகதிக்கு முன்பாக அனுப்பிவைக்கப்படவேண்டும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் ''இணைந்த பல்கலைக்கழகக் கல்லூரிகளுக்கான அனுமதி'' என்று தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும்.

### 7. முக்கிய குறிப்பு:-

வவுனியா, வடமாகாண இணைந்த பல்கலைக்கழகக் கல்லூரியில் கணித விஞ்ஞான திப்புளோமா/சான்றிதழ் கற்கை நெறிக்கு விண்ணப்பிப்போர் பதிவாளர் யாழ்ப்பாணப்பல்கலைக்கழகம், திருநெல்வேலி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு 1991 - 11 - 25 ஆந் திகதிக்கு முன்பாக விண்ணப்பத்தை அனுப்பி வைக்கலாம். இவ்விண்ணப்பதாரர் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு, கொழும்பு என்ற முகவரிக்கும் விண்ணப்பிக்கத்தேவையில்லை.

8. இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட க.பொ.த (உயர்தர) பரீட்சைப்பெறுபேறுகளின் படி விண்ணப்பிக்க விரும்பும் பரீட்சார்த்திகள் ஒவ்வொரு அமர்வுக்கும் தனித்தனி விண்ணப்பப்பத்திரங்களை அனுப்புதல் வேண்டும். ஆயினும் எல்லா விண்ணப்பங்களும் ஒரே உறையினுள் வைத்து அனுப்பப்படலாம்.

செயலாளர்
பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு
01-11-1991

## முன்வைக்கப்படும் கற்கைநெறிகள்

| கற்கை நெறி | தகைமைகளும் பிறவிசேட தேவைகளும் | இணைந்தபல்கலைக் கழகக்கல்லூரி | அமைந்துள்ள இடம் | தாய்ப்பல் கலைக்கழகம் | போதனா மொழி |
|---|---|---|---|---|---|
| 01. ஆங்கிலத்தில் திப்புளோமா/ சான்றிதழ் | கலைத்துறைக் கற்கைப்பயிற்சி நெறிக்கு அங்கிகரிக்கப்பட்ட பல்கலைக் கழகமொன்றில் அனுமதிப்பதற்கான தகைமைகளுடன் க. பொ. த. (சாதாரண) பரீட்சையில் ஆங்கிலத்தில் சித்தி; | 1, ஊவா மாகாணம்<br>2. சப்பிரகமுவா மாகாணம்<br>3. வடமத்திய மாகாணம் | நகங்கல<br>பெலிகுல் ஓபா<br>அநுராதபுரம் | ஸ்ரீஜயவர்த்தனபுர<br>ஸ்ரீஜபவர்த்தனபுர<br>ஸ்ரீஜயவர்த்தன புர | |
| 02. கணக்கியலிலும்நிதியியலிலும் திப்புளோமா/ சான்றிதழ் | அங்கீகரிக்கப்பட்ட பாடங்களான பொருளியல், கணக்கியல், வர்த்தகமும் நிதியியலும் ஆகியவற்றுடன் க. பொ. த (உயர்தர) பரீட்சையில் அங்கீகரிக்கப்பட்ட ஏதாவது ஒருபாடம்; | 1. தென் மாகாணம்<br>2. வடமத்திய மாகாணம் | காலி<br>அநுராதபுரம் | கொழும்பு<br>ஸ்ரீஜயவர்த்தனபுர | |
| 03. பிரயாணம் உல்லாசப்பிரயாணத் துறைமுகாமையில் திப்ளோமா/ சான்றிதழ் | க. பொ. த. (உயர்தர) பரீட்சையில் ஏதாவது நான்கு பாடங்கள். | 1. சப்பிரகமுவா மாகாணம் | பெலிகுல் ஓயா | ஸ்ரீஜயவர்த்தனபுர | |
| 04. ஹோட்டல் முகாமைத்துவத்தில் திப்புளோமா/ சான்றிதழ் | க. பொ. த. (உயர்தர) பரீட்சையில் ஏதாவது நான்கு பாடங்கள். | 1. வடமத்திய மாகாணம் | அநுராதரபும் | ஸ்ரீஜயவர்த்தனபுர | |
| 05. முயற்சிகள், சிறு வியாபார முகாமையில்திப்புளோமா சான்றிதழ் | அங்கீகரிக்கப்பட்ட பாடங்களான பொருளியல், கணக்கியல், வர்த்தகமும் நிதியியலும் ஆகியவற்றுடன் க. பொ. த. (உயர்தர) பரீட்சையில் அங்கீகரிக்கப்பட்ட ஏதாவது ஒரு பாடம். | 1. வடமத்திய மாகாணம்<br>2. தென் மாகாணம் | அநுராதபுரம்<br>காலி | ஸ்ரீஜயவர்த்தனபுர<br>கொழும்பு | |
| 06. காப்புறுதி அபாய முகாமையில் திப்புளோமா/ சான்றிதழ் | பொருளியல், வர்த்தகமும் நிதியியலும் கணக்கியல் ஆகியவற்றுடன் க. பொ. த. (உயர்தர) பரீட்சையில் அங்கீகரிக்கப்பட்ட ஏதாவது ஒரு பாடம் | 1. தென் மாகாணம் | காலி | கொழும்பு | |
| 07. பின்வருவனவற்றில் ஏதாவது ஒன்றை சிறப்புப் பாடமாகக் கொண்டு | க. பொ. த. (உயர்தர)ப் பரீட்சையில் தாவரவியல், இரசாயணவியல் விலங்கியல்ஆகியவற்றுடன் கீழ்வரும் ஏதாவது ஒரு பாடம் | 1. வடமேல்மாகாணம் | மகந்துற | பேராதனை | |
| விவசாயத்தில் திப்புளோமாச் சான்றிதழ் ★★ | விவசாயம், புவியியல், பௌதிகவியல் தூய கணிதம், அல்லது பிரயோக கணிதம் | 2. ஊவாமாகாணம் | நகன்கல | பேராதனை | |
| ஏற்றுமதி விவசாயம் பெருந்தோட்ட முகாமை★ விவசாய அபிவிருத்தியும் பரிமாறல்களும் விவசாய வியாபார முகாமை வெளிக்கள | | 3. கிழ்மாகாணம் | அம்பாறை | கிழக்கு | |

(4ஆம் பக்கம் பார்க்க)

## சந்தேகநபர் உண்ணா விரதம்

(சென்னை)

ஈ. பி ஆர். எல். எப். தலைவர் பத்மநாபா படுகொலை தொடர்பாகக் கைது செய்யப்பட்டு சிறையில் வைக்கப்பட்டிருந்த வழக்கறிஞர் மதுரை நாயகம் சென்னை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார் கொலை வழக்கில் தாம் சம்பந்தப்பட்டதை எதிர்த்து இவர் உண்ணா விரதம் இருந்தார் எனக் கூறப்படுகிறது.

## உரம் கையிருப்பில் உள்ளது

(யாழ்ப்பாணம்)

யூரியா தவிர்ந்த தேவையான அளவு உரம் கையிருப்பில் உள்ளமையால் விவசாயிகள் தமக்குத் தேவையான அளவு உரவகைகளைப் பெற்றுக்கொள்ளலாம் என கமநல சேவை சிரேஷ்ட உதவி ஆணையாளர் அறிவித்துள்ளார்.

இதுவரை காலமும் குறைந்தளவு உரவகைகளே கையிருப்பில் இருந்தமையால் குறிப்பிட்டளவே வழங்கப்பட்டது. (2)

## உணவு முத்திரைகள் விநியோகம்

(ஈச்சமோட்டை)

யாழ்ப்பாணத்தில் ஜனசக்தி வைத்திருப்பவர்களுக்கான வறுமை நிவாரண விசேட உணவு முத்திரை வழங்கப்படவிருக்கின்றது. தற்போது யாழ். உதவி அரசாங்க அதிபர் பிரிவில் உணவு முத்திரை வழங்குவதற்கான வேலைகள் துரித கதியில் நடைபெற்று வருகிறது எதிர்வரும் 25ஆம் திகதி தொடக்கம் கிராம சேவையாளர் ஊடாக உணவு முத்திரைகள் வழங்கப்படும் என யாழ். உதவி அரசாங்க அதிபர் அலுவலகம் தெரிவித்தது. (43)

## திங்கள் தபால் விநியோகம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத் தபால்கள் அனைத்தும் இன்று தரம் பிரிக்கப்பட்டு திங்கள் முதல் விநியோகிக்கப்படும்எனதபால் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

குமாரிக்கப்பல் மூலம் கொண்டு வரப்பட்ட தபால் பொதிகள் நேற்று பிரதம தபாலகத்திற்கு எடுத்துவரப்பட்டுள்ளன. (ச)

---

மாவீரர்

தெரிவிக்கப்படுகிறது;

மேலும் மாவீரர் வாரம் முடியும் வரை புலிகள் கடும் தாக்குதலில் ஈடுபடக் கூடும் எனவே இராணுவம் மிகவும் கவனமாகச் செயற்படும் என்றும் இராணுவப் பேச்சாளர் கேணல் சரத்முனசிங்கா கூறியுள்ளார்.

---

மாவீரரை

வில் மஞ்சள், சிவப்பு வர்ணங்கள் கொண்டு அலங்கரிக்கப்பட்டிருந்தன. வீதிகளில் கொடிகள் பறக்கவிடப்பட்டன.

சந்திகளில் தமிழீழத்தின் தேசபடத்தை தெரிவிக்கும் உருவப்படங்கள் அமைக்கப்பட்டிருந்தன.

மாவீரரை நினைவுகூரும் முகமாக பல இடங்களில் மேடை அமைக்கப்பட்டு பொதுக் கூட்டங்கள் நடாத்தப்பட்டன.

களிப்போ அல்லது வேதனையோ அற்ற ஒரு விதபுதிய உணர்வு பெற்றவர்களாக மக்கள் மாவீரர்களை நினைவு கூர்ந்து கௌரவித்தனர்.

மக்கள் தேசியகொடியேற்றுவதிலும் மௌனஞ்சலி செலுத்துவதிலும் மாவீரர்களை கௌரவிப்பதிலும் பேரார்வதுடன் செயற்பட்டதை அவதானிக்க முடிந்தது. (தி)

3ஆம் பக்கத் தொடர்ச்சி

| கற்கைநெறி | தகைமைகளும்பிறவிசேடதேவைகளும் | இணைந்தபல்கலைக் கழகக்கல்லூரி | அமைந்துள்ள இடம் | தாய்ப்பல் கலைக்கழகம் | போதனா மொழி |
|---|---|---|---|---|---|
| | எந்திரவியல் பண்ணை எந்திரங்களும்<br>அறுவடைக்குப் பின்னான தொழிநுட்பமும்<br>உணவு பத்திரப்படுத்தும் தொழிநுட்பம் ★<br>★ விலங்கின உற்பத்தி<br>உணவும் ஊட்டவளமும்★<br>சுற்றாடல் விஞ்ஞானம் மண்வள முகாமைத்துவமும் பாதுகாவலும் ★ | | | | |
| 08. பின்வருவனவற்றில் ஏதாவது ஒன்றை சிறப்புப் பாடமாகக் கொண்டு மனையியல் ஊட்டவளத்தில் சான்றிதழ்/திப்புளோமா ★★<br>உணவும் ஊட்டவளமும்<br>உணவூட்டியல்<br>உணவுச் சேவைகள் முகாமையில்<br>ஒப்பனைக் கலை<br>உள்ளக வடிவமைப்பும் மனை இடவமைப்பும்<br>புடைவைகள், ஆடைகள் அமைப்பும் தரப்படுத்தலும்<br>பாடசாலை முன்கல்வி<br>விலங்கு வேளாண்மை<br>வீட்டுத் தோட்டம்<br>உணவுத் தயாரிப்பு | (1) க. பொ. த. (உயர்தர) பரீட்சையில் கீழ்வரும் பாடங்களில் ஏதாவது நான்கு பாடங்கள்<br>தாவரவியல், இரசாயனவியல், விலங்கியல், விவசாயம், பௌதிகவியல், தூயகணிதம், அல்லது பிரயோக கணிதம்<br>அல்லது<br>(2) க. பொ. த. (உயர்தர) பரீட்சை மனைப்பொருளியலை ஒரு பாடமாக எடுத்த கலைத்துறை மாணவர்கள் (கலைத்துறைப் பரீட்சார்த்திகள் கற்கைநெறி முறையாக தொடங்குவதற்கு முதல் ஒரு குறிப்பிட்ட விஞ்ஞான நெறியை கற்கும்படி கேட்கப்படுவார்கள்) | 1. வடமேல் மாகாணம்<br>2. மேல்மாகாணம் | குளியாப்பிட்டிய<br>தெகிவளை | களனி<br>ஸ்ரீஜெயவர்தன புர | |
| 09. கணித விஞ்ஞானத்தில் திப்புளோமா / சான்றிதழ்★★ | க. பொ. த(உயர்தர)ப் பரீட்சையில் தூயகணிதம், பிரயோக கணிதம் ஆகியவற்றில் சித்தி சிறப்புத் தேவையாகும். | 1. மேல்மாகாணம்<br><br>2. வடமாகாணம் | யத்தலகெதர<br>மருதானை<br>வவுனியா | களனி<br>களனி<br>யாழ்ப்பாணம் | |

(6ஆம்பக்கம் பார்க்க)

# மாதிரி விண்ணப்பப் படிவம்

## இணைந்த பல்கலைக்கழக கல்லூரிகளுக்கு அனுமதிக்கான விண்ணப்பம் - 1991

01. 1 விண்ணப்பதாரியின் முழுப்பெயர்

02. நிரந்தர முகவரி

03. பால்

1: ஆண்
2: பெண்

04. இனம்

1. சிங்களவர்
2. தமிழர்
3. இஸ்லாமியர்
4. வேறு

05. நிரந்தர வசிப்பிடத்தில் நிர்வாக மாவட்டம்.

06. அனுமதி கோருவதற்குத் தகுதியான க. பொ. த. (உயர்தர) பரீட்சையின் பெறுபேறு:

06. 1 பரீட்சை வருடம்

06. 2 பரீட்சைக்குத் தோற்றிய நிர்வாக மாவட்டம்

06. 3

| தோற்றிய பாடங்கள் | பெற்ற தரம் | மொழி |
|---|---|---|
| | | |
| | | |
| | | |
| | | |

06. 4 சுட்டிலக்கம்

06. 5 திரட்டுப் புள்ளிகள்

07. க.பொ.த (உயர்தர) பரீட்சைக்குத் தோற்றிய தடவைகள்

07. 1 ஒவ்வொரு தடவையினதும் திரட்டுப் புள்ளிகள்

1-ம் தடவை 2-ம் தடவை 3-ம் தடவை

08. நீர் எப்போதாவது இலங்கையில் உள்ள ஏதாவது பல்கலைக்கழகமொன்றில் அல்லது பல்கலைக்கழக கல்லூரியொன்றில் உள்ளக மாணவராக பதிவு செய்துள்ளீரா? ஆம் எனின் முழு விபரங்களையும் தருக.

1. ஆம்
2. இல்லை

09. அனுமதிக்கு கருத்திற் கொள்ளவேண்டிய கற்கை நெறிகளின் உம்முடைய முன்னுரிமை ஒழுங்கைக் குறிப்பிடுக.
(விண்ணப்பத்தில்குறிப்பிட்ட முன்னுரிமை ஒழுங்கை மாற்றுவதற்கு மாணவர் எவரும் அனுமதிக்கப்பட மாட்டார்.)

| முன்னுரிமை ஒழுங்கு | கற்கை நெறி | பல்கலைக்கழக கல்லூரி | மொழி |
|---|---|---|---|
| 1. | | | |
| 2. | | | |
| 3. | | | |
| 4. | | | |
| 5. | | | |
| 6. | | | |

இப்படிவத்தில் என்னால் தரப்பட்டுள்ள விபரங்கள் யாவும் சரியானதும், உண்மையானதும் என்றும், நான் மூன்று முறைகளிற்கு மேல் க. பொ. த. (உயர்தர)ப் பரீட்சைக்குத் தோற்றவில்லை என்றும் உறுதிப்படுத்துகின்றேன்.

........................ ........................................

திகதி: விண்ணப்பதாரியின் கையொப்பம்

(B/3507)

---

இடதுசாரிகளின்

என்பதை அவர்களே தீர்மானிக்கட்டும்.

ஒரு தேசிய இனம் தன் சுதேசிய நலன்களைப் பாதுகாக்க முயல்வது புறக்கணிக்கப்படவேண்டிய விடயமல்ல தமிழ் மக்களின் போராட்டம் ஒரு தேசிய எழுச்சியேயாகும் ஆளும் அரசின் நெருக்கடியின் நிமித்தமும் வரலாற்று ரீதியாக தமிழ் மக்களை புறக்கணித்ததன் பெறுபேற்றின் பயனாகவும் இம் மாபெரும் எழுச்சி ஏற்பட்டது. தமிழ் மக்களின் எழுச்சியும் அதன் நிமித்தம் முன்னோக்கி எழுந்த போராட்டமும் அரசிற்கெதிராக எழுந்த போராட்டமே தவிர அது சிங்கள மக்களுக்கெதிரான போராட்டமல்ல.

ஒரு இனம் நெருக்கடிக்கு உள்ளாகும் பொழுது போராடுவதில் எவ்வித தவறும் இல்லை. பாரம்பரிய தனித்துவமான கலாசாரத்தையுடைய தமிழ்ப் பெண்கள் தங்கள் இறுக்கமான பண்புகளில் இருந்து விடுபட்டு போராட முன்வந்தனர். இத் தேசிய போராட்டங்கள் முற்போக்கு குணாம்சத்துடன் முன் எடுத்துச் செல்லப்படவேண்டும்.

இடதுசாரிகளின் குறைபாடுகளினாலும்; அன்று அவர்கள் விட்ட பெருந் தவறினாலும் தமிழினம் தனியே நின்று போராடுகின்றது. இது இடதுசாரிகள் விட்ட பெரும் தவறாகும். இவ்வாறு அவர் தனது உரையில் குறிப்பிட்டார்.

---

மக்கள்

ரம் பாதிக்கப்படுவதை தடுப்பதற்காகவும் அரசியல் தீர்வொன்று அவசியம் என்றும் இக்கூட்டத்தில் சுட்டிக் காட்டப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

பொதுமக்கள் தமது கருத்துக்களையும், ஆலோசனைகளையும் சுருக்கமாக எழுதி வரும் 16 ஆம் திகதிக்குள் பாராளுமன்ற தெரிவுக் குழுவின் செயலாளருக்கு அனுப்பி வைக்குமாறும் இக்கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வாய் மூலமான அபிப்பிராயங்களை பெற்றுக் கொள்ள வேண்டுமென இக்குழு கருதினால் அதற்கான சந்தர்ப்பமும் வழங்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

தமிழ் நாட்டில்

போராளிகளின் வாக்குமூலத்தில் இருந்தும்,

அவர்களிடம் இருந்து பறிமுதல் செய்யப்பட்டவைகளில் இருந்தும், காரைக்காலில் இந்திய கடற்படை கைப்பற்றிய விடுதலைப் புலிகளின் ஆயுதக் கப்பலில் இருந்து கைப்பற்றப்பட்ட நாட்குறிப்புத் தகவல்களில் இருந்தும் நாகராஜன் விடுதலைப்புலிகளின் நடவடிக்கைகளுக்கு அனுகூலமாகவும், ஆதரவாகவும் இருந்துள்ளசர் எனத் தெரியவந்துள்ளதாகத் திருச்சி காவல்துறை அதிகாரி தெரிவித்தார்.

---

இழந்த

அவர் தொடர்ந்து உரை நிகழ்த்தும்போது, சுயநலம் கொண்டவர்கள் தமது தேசத்தில் இருந்து அன்று வெளிநாடு சென்றுவிட்டார்கள். இங்கு எஞ்சியுள்ளவர்கள் இந்த மண்ணையும், தமிழினத்தின் உரிமைகளையும் நேசிப்பவர்களே என்றும் கூறினார்.

மறுமலர்ச்சிக் கழகப் பிரதிநிதி ச. கொலின்ஸ் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் மாணவரணித் தலைவர் மா. இளம்பிறையன் அவர்களும் கலந்துகொண்டு உரை நிகழ்த்தினார்.

---

1991 க. பொ.

களின் ஆண்டு இறுதிப் பரீட்சைகள் டிசம்பர் மாதம் 7ஆந் திகதி ஆரம்பமாக இருக்கின்றன;

# ஓராண்டு நினைவஞ்சலி



தாயின் மடியில் 09 - 02 - 1963

தமிழீழ மண்ணில் 22 - 11 - 1990

மாங்குள இராணுவ முகாம் நேரடி மோதலில்
வீரச்சாவடைந்த

## 2ஆம் லெப். மாரியாச்சி

## (அருள்மொழி (சிந்தனா) குணசிங்கம்)

உன் இலட்சிய வேள்வியில்
ஆகுதியாகிய அன்புச் சிந்தனாவே
உன் நினைவுச் சுமைகளை
நெஞ்சிலே சுமந்து நிற்கிறேன்!

யாழ்ப்பாணம். B/3509 - நண்பி

# 4 ம் ஆண்டு நினைவஞ்சலி



வீரஜனனம் 1966 - 12 - 06

வீரச்சாவு 1987 - 11 - 22

## வீரவேங்கை அசோக்

## (மயில்வாகனம் சந்திரசேகரன்)

ஒரு நாலு ஆண்டு ஓடி மறைந்ததடா
விருட்சமென வளர்ந்த வீரவேங்கையொன்று
விதையாகி வீழ்ந்து கதையாகிப் போய்
ஒரு நாலு ஆண்டு ஓடி மறைந்தாலும்
ஒரு நினைவாய் எம்முடனே
வரும் காலம் நமக்காகும்
பெரும் புகழ் உனக்காகும்!

தெல்லிப்பழை குடும்பத்தினர்

R/1943

### தேசியக் கொடி

காரியாலயங்கள், அரச, தனியார் அலுவலகங்கள், திணைக்களங்கள், அகதி முகாம்கள், பாடசாலைகள், பொதுஇடங்கள் போன்றவற்றில் தமிழீழத்தின் தேசியக் கொடி ஏற்றப்பட்டது. மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது.

விடுதலைப் புலிகளின் யாழ் மாவட்ட செயலகத்தில் யாழ். மாவட்ட அரசியல் பொறுப்பாளர் திரு. மாறன் தேசியக்கொடியை ஏற்றி வைத்தார். இவ்வைபவத்தில் புலிகளின் முக்கிய பிரமுகர்கள் கலந்துகொண்டனர்.

கலை, பண்பாட்டுக் கழக செயலகத்தில் திரு. பண்டிதர் பரந்தாமன் தேசியக்கொடியை ஏற்றி வைத்தார். அங்கு ஏராளமான கலைஞர்களும், எழுத்தாளர்களும் கலந்து கொண்டனர்.

தனியார் கல்வி நிறுவனங்களில் ஏராளமானவர்கள் தமிழீழத் தேசியக்கொடி ஏற்றி வைக்கும் நிகழ்வில் கலந்து கொண்டனர். அங்கு மாவீரர்களுக்கு மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது.

மாவீரர்களின் தியாகத்தை வெளிப்படுத்தும் எழுச்சிக் கூட்டங்கள் நேற்றுப் பல இடங்களில் நடைபெற்றன. இக் கூட்டங்களில் விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணியின் முக்கிய பிரமுகர்கள் கலந்து கொண்டு உரையாற்றினார்கள்.

தீவகப் பகுதியிலிருந்தும், வேறு இடங்களிலிருந்தும் இடம் பெயர்ந்து வந்து யாழ். நகரப் பகுதியில் வேம்படி பாடசாலை, யாழ். ரயில் நிலையம் ஆகியவை உட்பட பல அகதி முகாம்களில் தங்கியிருப்போர் அந்தந்த இடங்களில் தேசியக் கொடி ஏற்றி மாவீரர்களை நினைவு கூர்ந்தனர்.

மட்டக்களப்பு, அம்பாறை, திருக்கோணமலை தொடர்பகங்களிலும் தேசியக் கொடி ஏற்றப்பட்டன.

யாழ். செயலகத்தில் தேசியக்கொடி ஏற்றப்பட்டு மாவீரர் நினைவாக மரக்கன்றுகள் நாட்டப்பட்டன.

கல்வித்திணைக்களம், பிரதம தபாலகம், உள்ளூராட்சித் திணைக்களம், பனை அபிவிருத்திச் சபை ஆகியவை உட்பட அனைத்து அலுவலகங்களிலும் தேசியக் கொடி ஏற்றப்பட்டதுடன் அரச அதிகாரிகளினாலும், ஊழியர்களினாலும் மௌனாஞ்சலி செலுத்தப்பட்டது.

யாழ். பல்கலைக்கழகத்தில் துணைவேந்தர் பேராசிரியர் துரைராசா தேசியக் கொடியை ஏற்றி வைத்தார். மாவீரர் பெயர்களில் பல இடங்களில் வீதிகள் திறக்கப்பட்டன.

மட்டக்களப்பு அம்பாறை மாவட்டத் தொடர்பகத்தினரால், யாழ் இந்துக் கல்லூரி மைதானத்தில் மாவீரர் வரை சித்திரக் கண்காட்சி ஆரம்பித்துவைக்கப்பட்டன. மக்கள் முன்னணித் தலைவர் திரு மகேந்திரராசா அந்நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார்.

திருக்கோணமலைத் தொடர்பகமும் தூதரகமும், திருமலையிலிருந்து இடம் பெயர்ந்து வந்துள்ள மக்களும் இணைந்து கொக்குவில் இந்துக் கல்லூரியில் மாவீரர் ஆரம்ப நாள் விழாவை நடாத்தினர். திருக்கோணமலை மாவட்ட இராணுவப் பொறுப்பாளர் சஞ்சை அவர்கள் அந்நிகழ்வில் கலந்து கொண்டார்.

வடமாராட்சிப் பகுதியிலும் மாவீரர் ஆரம்ப நாள் மிக உணர்வு பூர்வமாக இருந்தது. விடுதலைப்புலிகளின் வடமராட்சிப் பிரிவுப் பொறுப்பாளர்கள் தமிழீழத் தேசியக் கொடியை ஏற்றி வைத்தனர்.

(சி, ச, 36, 21, 43)

### மீட்பு நிதி

வடக்கம்பரையில் மீட்புநிதி திரட்ட ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக தமிழீழ விடுதலைப் புலிகளின் நிதிப்பொறுப்பாளர் செ. தமிழேந்தி தெரிவித்துள்ளார்.

காரைநகரைச்சேர்ந்த மீட்பு நிதி செலுத்த விரும்புவோர் இவ்வாய்ப்பைப்பயன்படுத்திக் கொள்ளுமாறு வேண்டப்பட்டுள்ளனர்

### சிங்கபுரவில்

கொண்டிருந்த இராணுவத்தினர் மீது விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்திய அதே வேளை அவர்களுக்கு உதவ குருட்டல் முகாமிலிருந்து வந்த மற்றொரு இராணுவ அணி மீதும் விடுதலைப் புலிகள் தாக்குதல் நடாத்தியுள்ளனர். விடுதலைப் புலிகளின் கடும் தாக்குதலை சமாளிக்க முடியாத இராணுவ அணியினர் இழப்புக்களுடன் உடனடியாகவே முகாம் திரும்பினர்.

இதே வேளை சிங்கபுரவில் இடம் பெற்ற தாக்குதலின் போது இருபது இராணுவத்தினர் கொல்லப்பட்டதாகவும் இரண்டு இராணுவத்தினரைக் காணவில்லை என்று கொழும்பில் பாதுகாப்பு அமைச்சு வட்டாரங்கள் கூறியுள்ளன. இத் தாக்குதலில் விடுதலைப் புலிகள் தரப்பில் எவ்வித சேதங்களும் இல்லை என்பது குறிப்பிடத்தக்கது. சிங்கபுரவில் நடந்த தாக்குதல்களில் விடுதலைப் புலிகள் பல நவீனரக ஆயுதங்களைக் கைப்பற்றினர். அவற்றின் விபரம் வருமாறு:-

- ★ ஏ.கே.எல்.எம் ஜி ரகத் துப்பாக்கி -01
- ★ அதற்குரிய ரவைக்கூடு -01
- ★ ஏ கே.எல்.எம். ஜி ரவை இணைப்பி -50
- ★ ரி.56-2ரகத்துப்பாக்கி -14
- ★ ரி 81 ரகத் துப்பாக்கி -03
- ★ ஜி-3 ஏ.3 ரகத் துப்பாக்கி -01
- ★ ரவைக்கூடு -03
- ★ எவ்.என்.சி ரகத் துப்பாக்கி -01
- ★ அதற்குரியரவைக்கூடு -03
- ★ வானொலி தொலைத் தொடர்பு சாதனம் -01
- ★ ஜே.ஆர். ரக கைக்குண்டு -01
- ★ ரி-81 துப்பாக்கி எறிகணை -01
- ★ ஏ.கே.எல்.எம்.ஜி ரவைக்கூடு -11
- ★ ரி-56 ரவைக்கூடு -51
- ★ 7.62 ரக நடுத்தர ரவைகள் -1658
- ★ 5 56 ரக ரவைகள் -13
- ★ நேட்டோ ரவைகள் -46
- ★ தொலைநோக்குக்கருவி-01

(4ம் பக்கத் தொடர்ச்சி)

| | | | | |
|---|---|---|---|---|
| | | | மத்தியமாகாணம் | பொல்கொல்ல பேராதனை |
| 10. | உயிரியல் விஞ்ஞானம் அல்லது பௌதீக விஞ்ஞானத்தில் சிறப்புத் தேர்ச்சியுடன் விஞ்ஞானத்தில் திப்புளோமா சான்றிதழ்/ | பின்வருவனவற்றுள் ஒற்றைப் பெற்றிருத்தல் வேண்டும்:<br>(1) தாவரவியல், இரசாயனவியல், விலங்கியல் அத்துடன் பௌதீகவியல்/ தூயகணிதம்/பிரயோக கணிதம்<br>அல்லது<br>(2) இரசாயனவியல், பௌதீகவியல் விலங்கியல் அத்துடன் தாவரவியல்/ தூயகணிதம்<br>அல்லது<br>(3) பௌதீகவியல், இரசாயனவியல், தூயகணிதம் அத்துடன் பிரயோக கணிதம் | | |
| 11. | உல்லாசப்பயணத் துறையியலும் காலச்சாரவியலும் திப்புளோமா/ சான்றிதழ் | க. பொ. த. (உ. த) பரீட்சையில் ஏதாவது நான்கு பாடங்கள் | வடமத்திய மாகாணம் | அநுராதபுரம் ஸ்ரீ ஜெயவர்தனபுர |

★ இக் குறியீட்டால் குறிக்கப்பட்டவை கிழக்குமாகாண பல்கலைக்கழகக் கல்லூரியினால் வழங்கப்படும் விசேட துறைகளாகும்.

★★ இக்குறியீட்டால் குறிக்கப்பட்டவை திப்புளோமா தகைமையைச் சிறப்பாக நிறைவேற்றும் மாணவர் ஒருவர் இரண்டு வருட வேலை அனுபவத்தின் பின்னர் அவர் விரும்புமிடத்து பட்டப் படிப்பை மேற்கொள்ள முடியும்;

★★★ இக்குறியீட்டால் குறிக்கப்பட்டவை எந்தமொழியில் க. பொ. த, (உ. த.) பரீட்சையை எடுத்தாலும் இக்கற்கை நெறியினுக்கு விண்ணப்பிக்கலாம்.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, ஆம் 31 இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1991 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 22 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது

## சிந்தனைக்கு

உன் சொல்லுக்கு ஒப்ப
செயலையும் செயலுக்கு
ஒப்ப சொல்லையும் இணங்கச் செய்
— வில்லியம் ஷேக்ஸ்பியர்

ஈழநாதம்

31, மகேந்திராவீதி, யாழ்ப்பாணம். 22-11-1991
தொலைபேசி
ஆசிரியர்பீடம் 025 - 2839 நிர்வாகபீடம் 2208
த. பெ. எண் 05

# சமிக்ஞைகள் தெரியவில்லை

இலங்கையின் இனப்பிரச்சினை தீர்வு தொடர்பாக அமைச்சர் செள. தொண்டமான் தீவிர முயற்சிகளை மேற்கொண்டு வருவதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன. இவற்றின் ஒரு கட்டமாக சிறிலங்கா ஜனாதிபதி ஆர். பிரேமதாசாவுடனும் எதிர்க்கட்சி உறுப்பினர் அனுரா பண்டாரநாயக்காவுடனும் ஒரு சுற்றுப் பேச்சுவார்த்தைகள் நடத்தியுள்ளதாகவும் அதில் முன்னேற்றங்கள் தென்படுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றன. இதேவேளை இந்தியா சென்றுள்ள அமைச்சர் தொண்டமான் இந்தியப் பிரதமர் நரசிம்மராவுடனும் இலங்கைத் தமிழர் விவகாரம் குறித்துப் பேசுவர் எனவும் கொழும்பு திரும்பிய பின்னர் மீண்டும் திரு. பிரேமதாசாவுடனும், எதிர்க்கட்சித் தலைவி சிறிமாவோ பண்டாரநாயக்காவுடனும் பேச்சு நடத்துவார் எனவும் தெரியவருகிறது.

திரு தொண்டமானின் இந்த முயற்சிகளை சிறிலங்கா அரச தரப்பும் எதிர்க்கட்சி தரப்பும் வரவேற்பு கிடைத்ததுபோல் விடுதலைப் புலிகள் தரப்பில் இருந்தும் சாதகமான பதிலே கிடைக்கப் பெற்றதெனலாம். பேச்சுவார்த்தைக்கோ அன்றி சமாதான தீர்விற்கோ புலிகளும் நிபந்தனைகளை விதிக்கவில்லை. ஆனால் பேச்சுவார்த்தையோ அன்றி சமாதானத் தீர்வோ ஏற்பட வேண்டுமானால் அதற்குரிய அழுத்தங்கள் அற்ற சூழ்நிலை ஒன்றிலேயே அதனை மேற்கொள்ள முடியும் என விடுதலைப் புலிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

ஆனால் பேச்சுவார்த்தை, சமாதானத் தீர்வு என்பனவற்றிற்கு அரச தரப்பில் இருந்து குறிப்பிடக் கூடிய வரவேற்பு கிடைத்துள்ளது பற்றி குறிப்பிட்டுள்ள அமைச்சர் தொண்டமான் விடுதலைப் புலிகளின் கோரிக்கைகளை - அழுத்தமற்ற சூழ்நிலையை உருவாக்குதல் - தொடர்பான விவகாரத்தில் எந்தவித நல்லெண்ண சமிக்ஞையையும் இதுவரையும் காட்டவில்லை.

யாழ். குடாநாடு இன்னமும் இராணுவத்தினரின் முற்றுகைக்குள் உள்ளது. உணவுப் பற்றாக்குறையினாலும், பொருளாதாரத் தடையினாலும் மக்கள் சொல்லவொண்ணா துன்பத்திற்கு உள்ளாகியுள்ளனர். அரசு பட்டினிபோட்டு தமிழ் மக்களை பணிய வைத்துவிடலாம் என எண்ணுவது போல் தெரிகின்றது.

அத்தோடு இராணுவ அழுத்தங்களும் குறைவதாக இல்லை. எதிர்காலத்திலும் குறையப் போவதற்கான சூழ்நிலை இருப்பதாக இல்லை. வரவு செலவுத் திட்டத்தில் பாதுகாப்புச் செலவினத்திற்கெனப் பெருந்தொகை (1530 கோடி ரூபா) ஒதுக்கப்பட்டுள்ளது. அதேவேளை புதிதாகப் பதவி ஏற்ற கூட்டுப் படைகளின் தளபதியும், இராணுவத் தளபதியும் போர் நடவடிக்கைகள் பற்றிப் பேசுவதிலேயே தீவிரமாகவுள்ளனர்.

யாழ்ப்பாணத்தை நாம் பிடிக்க வேண்டும் அது தவிர்க்க முடியாது. அது எந்த நேரத்திலும் நடக்க முடியும் என கூட்டுப்படை நடவடிக்கை பொறுப்பதிகாரி ஜெனரல் ஹமில்டன் வணசிங்கா தெரிவித்துள்ளமையில் இருந்து பேச்சிற்கான சமாதான சமிக்ஞை எதுவும் தெரிவதாக இல்லை. போருக்கான சமிக்ஞையே தெரிவதாகவுள்ளது.

இந்நிலையில் திரு. தொண்டமானின் முயற்சிக்கு சிறிலங்கா அரசாங்கத் தரப்பில் இருந்தும் இராணுவத்தரப்பினரிடம் இருந்தும் கிடைக்கும் வரவேற்பானது எந்தளவிற்கு உண்மைத் தன்மையுடையது என்பதைச் சந்தேகிக்க வைக்கின்றது. பேச்சுவார்த்தையை சிறிலங்கா ஜனாதிபதியோ அரசாங்கமோ உளப் பூர்வமாக விரும்புமாயின் அதற்குரிய வெளிப்படையான சமிக்ஞைகளைத் தெரிவிக்க வேண்டும். அழுத்தங்களை தளர்த்தி பேச்சுக்களில் நம்பிக்கைக்கு வழிவகைகளை ஏற்படுத்த வேண்டும். அவ்வாறு இல்லையேல் இராணுவ நடவடிக்கைகள் சில நாட்கள் முனைப்பாக இல்லாமல் இருப்பது ஹமில்டன் வணசிங்கா இராணுவத்திற்கு வழங்கும் ஓய்வே ஒழிய சமாதான தீர்விற்கான முன்னறிவிப்பாகக்கொள்ள முடியாது அதாவது இராணுவம் தொடர்ந்து போரிட்டுக்கொண்டிருக்க முடியாது, அவர்களுக்கு ஓய்வு தேவை என்று ஜெனரல் ஹமில்டன் கூறியதில் இருந்து இம்முடிவுக்கே வரக் கூடியதாகவுள்ளது.

இராணுவ நடவடிக்கை பாதிப்பு

# மக்களுக்கு உதவி வழங்குவது அந்நாட்டு அரசுகளின் கடமை

(யாழ்ப்பாணம்)

உள்நாட்டு இராணுவ நடவடிக்கைகளால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்கவேண்டியது அந்தந்த நாட்டு அரசுகளின் கடமை என்று பல சர்வதேச நாடுகளும், சர்வதேச தொண்டர் நிறுவனங்களும் பலவும் அறிவித்துள்ளன.

தற்போது உலகில் இயற்கை அனர்த்தங்களால் பாதிக்கப்பட்ட மக்கள் பலர் வாழ்வதால் அவ்வாறான மக்களுக்கே சர்வதேச நாடுகளும் உதவி வழங்கத் தயாராக இருப்பதாகவும் உள்நாட்டு இராணுவ நடவடிக்கைகளால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு தாம் உதவிகள் எதுவும் வழங்கப் போவதில்லை என்றும் அந்நாடுகள் அறிவித்துள்ளன.

இவ் அறிவித்தலைத் தொடர்ந்து வெளிநாடுகளிடம் இருந்து சிறிலங்கா எதிர்பார்க்க நிதி உதவிகள் எதுவும் சிறிலங்கா அரசுக்கு கிடைக்கவில்லையெனவும் தெரியவருகிறது. [ஈ]

வவுனியா மாவட்டம்

## 1991 மாவீரர் நாள் பேச்சுப் போட்டி முடிவுகள்

வவுனியா மாவட்டத்தில் மாவீரர் வாரத்தையொட்டி விடுதலைப்புலிகளின் மாணவர் இயக்கம் நடாத்திய பேச்சுப் போட்டிகளின் முடிவுகள் அறிவிக்கப்பட்டுள்ளன. பிரிவு: 1 (ஆண்டு 1) முதலாமிடம் சொ. துஷ்யந்தன் கோயில் குஞ்சுக்குளம் அ.த.க. பாடசாலை, பிரிவு: 2 (ஆண்டு 2,3) முதலாமிடம் கோ. பிரதீபன் ஓமந்தை மகாவித்தியாலயம், பிரிவு: 3 (ஆண்டு 4, 5) முதலாமிடம் பூ. மதனரூபன் சேமமடு படிவம் இரண்டு அ.த.க. பாடசாலை, இரண்டாமிடம் ராஜசுலோசனா புதுக்குளம் மகாவித்தியாலயம், மூன்றாமிடம் சு. பிரியதர்சினி பூவரசங்குளம் மகாவித்தியாலயம் பிரிவு: 4 (ஆண்டு 6) முதலாமிடம் சு. திவாகர் நெளுக்குளம் கலைமகள் வித்தியாலயம் இரண்டாமிடம் க. ஜெயகர்சினி மாதர்பணிக்கர் மகிழங்குளம் கனிஷ்ட உயர்தரவித்தியாலயம், மூன்றாமிடம் சா. துர்கா பூவரசங்குளம் மகாவித்தியாலயம்.

வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்த முப்பத்தேழு (37) பாடசாலைகளைச் சேர்ந்த சுமார் இருநூற்றி ஐம்பது மாணவர்களுக்கிடையே இப் போட்டிகள் நடாத்தப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கது.

## காரை. ஆசிரியர் சம்பளம் வேலணைக் கோட்ட அதிகாரிக்கு

[நல்லூர்]

காரைநகர் ஆசிரியர்களின் சம்பளப் பணம் ரூபா 30,00,000 மத்திய கல்வி அமைச்சினால் அத்தியாவசிய சேவைகள் நாயகத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் இதனை அங்கிருந்து சென்று காரைநகர் பாடசாலைகளுக்குரிய சம்பளப்பணத்தை வழங்கி அதற்குரிய சம்பளக் கணக்குகளை யாழ் கல்வித்திணைக்களத்துக்கு தெரிவிக்குமாறு வட-கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளரால் வேலணைக் கோட்ட உதவிக் கல்விப்பணிப்பாளர் பணிக்கப்பட்டுள்ளார்.

ஆனால் வேலணைக் கோட்டத்தினுள் காரைநகர் பாடசாலைகள் எதுவும் இல்லை என்பதும் காரைநகர் பாடசாலைகளின் சம்பளம் பண்டத்தரிப்பு கோட்டக்கல்வி அலுவலகத்தினாலேயே வழங்கப்பட்டு வருவதும் வடகிழக்கு மாகாண கல்வி அமைச்சுக்குக் கூடத் தெரியாதுள்ளது ஆச்சரியப்படவேண்டிய விடயமே என கல்வித்திணைக்கள வட்டாரங்களை ஆச்சரியப்பட வைத்துள்ளது.

கிழக்கில் தொடரும்

## இராணுவத்தின் வன்முறை 2பேர் கொலை, சித்திரவதை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் சிறிலங்கா இராணுவத்தினரும், சமூக விரோதக் கும்பல்களும் தொடர்ந்து வன்முறையில் ஈடுபட்டு வருவதாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் கூறுகின்றன. கடந்த பதின்மூன்றாம் திகதியன்று கொம்மாதுறை இராணுவத்தினரும், முஸ்லிம் வியாபாரிகளும் சேர்ந்து கொம்மாதுறை கிராமத்தைச்சுற்றி வளைத்து தேடுதல் நடாத்தியுள்ளனர். இத் தேடுதலின் போது கைது செய்யப்பட்ட அழகுதுரை சாந்தன் (22) என்பவரைக் கடுமையான சித்திரவதைக்கு உள்ளாக்கிய பின் அவரை முகமூடியாகப் பயன்படுத்தி மறுநாள் கொம்மாதுறைத் தீவுப்பகுதியைச் சுற்றி வளைத்து அப்பகுதியைச் சேர்ந்தவரைக் கைது செய்துள்ளனர்.

கடந்த பதினோராம் திகதி கொம்மாதுறையில் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்ட கனகரத்தினம் என்பவரின் குதிக்கால்களை இராணுவத்தினர் வெட்டியுள்ளனர். இதே நாளன்று பாலையடி வெட்டையிலுள்ள இராணுவத்தினர் மாவடி முன்மாரி என்னுமிடத்திற்குச் சென்று அதேயிடத்தைச் சேர்ந்த சாமித்துரை தங்கராசா (49 வயது) என்பவரைச் சுட்டுக் கொன்றுள்ளனர்.

கடந்த பதினைந்தாம் திகதியன்று சாக்கரச்சி வெட்டைக்குச் சென்று பாலையடி வெட்டை இராணுவத்தினர் மோகன் என்பவருக்குச் சொந்தமான கடையை சேதப்படுத்தியதுடன் அங்கிருந்த பொருள்களையும் எடுத்துச் சென்றுள்ளனர்.

சந்திவெளிப் பகுதிக்கு நேற்று முன்தினம் சென்ற இராணுவத்தினர் கணபதிப்பிள்ளை சிங்கன் [வயது 20] என்பவரைச் சுட்டுக் கொன்றுள்ளனர். கிரான் கிராமத்தைச் சேர்ந்த பூபாலபிள்ளை தாமோதரன் (வயது 27) என்பவரை கொம்மாதுறையில் வைத்து கைது செய்த சமூக விரோதக் கும்பலொன்று அவர் கொண்டு வந்த பொருள்களையும் கொள்ளையடித்துச் சென்றுள்ளது.

## தேயிலைக்கு விலைநிர்ணயம்

[யாழ்ப்பாணம்]

பொதியில் அடைக்கப்பட்ட தேயிலைக்கு யாழ். மாவட்ட பாவனையாளர் பாதுகாப்புக்குழு விலை நிர்ணயம் செய்துள்ளது. இது தொடர்பான விலை விபரங்களையும் பாவனையாளர் பாதுகாப்பு குழு வெளியிட்டுள்ளது.

## தேர்தல்முடிவுகள் அரசிற்கு கிடைத்த வரவேற்பு — நரசிம்மராவ்

(டில்லி)

பொருளாதாரத் துறையிலும், வேறு பிரிவுகளிலும் அரசின் முன் முயற்சி பரவலாக வரவேற்கப்படுவதையே இடைத்தேர்தல் முடிவுகள் எடுத்துக் காட்டுகின்றன என்று இந்தியப் பிரதமர் பி.வி நரசிம்மராவ் தெரிவித்துள்ளார்.

நடைபெற்ற இடைத்தேர்தல்களின் முடிவு குறித்து செய்தியாளர்கள் மாநாட்டில் பேசுகையிலேயே இவ்வாறு அவர் தெரிவித்தார்.

இந்த மாநாட்டில் கலந்து கொண்டு பேசிய காங்கிரஸ் கட்சிப் பிரதிநிதி பேராசிரியர் ஓ. பி. தாகர் பீகாரில் லோக்சபா தொகுதி மூன்றிலும் மறுவாக்குப் பதிவு நடத்துமாறு கேட்டுள்ளார். தொடர்ந்து பேசிய அவர் நியாயமான முறையில் இந்தத் தொகுதிகளில் மறுவாக்குப் பதிவு நடைபெற வேண்டும் என்றும் அப்போதுதான் மக்கள் அச்சமின்றியும் கட்டுப்பாடு இன்றியும் வாக்குச் செலுத்த முடியும் என்றும் தெரிவித்தார் என்றும்.

இடைத்தேர்தல்களின் முடிவுகள் பிரதமர் நரசிம்மராவ் மற்றும் மத்தியில் இந்திரா காங்கிரஸ் அரசின் செயல் முறையையும் தரத்தையும் மக்கள் வரவேற்பதையே காட்டுகின்றன.

மக்கள் உறுதிப்பாட்டிற்கு வாக்களித்துள்ளனர் என்றும் மறுசீரமைப்பு, சோஷலிச பொருளாதாரச் சிக்கான ஒரு தீர்ப்பு என்றும் அவர் தெரிவித்தார்.

இதேநேரம், இத்தேர்தல் முடிவுகள் குறித்து கருத்து வெளியிட்ட ஜனதாதள பிரதிநிதி ஹரிகேஷ்சிங் 'சென்ற பொதுத்தேர்தல்களில் காணப்பட்ட அதே போக்கு இப்போதும் தொடருவதாகவும், வாக்குப்பதிவு முறையில் பெரிய மாறுபாடு எதுவும் இல்லை, என்றும் தெரிவித்துள்ளார்

## 25ஆம் திகதி சர்வகட்சி மாநாடு

சர்வகட்சி மாநாடு மீண்டும் வரும் 25 ஆம் திகதி மாலை 5-00 மணிக்கு ஜனாதிபதி செயலகத்தில் கூடும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இக் கூட்டத்தில் இரண்டாவது சபையை ஆரம்பிப்பதற்கான யோசனை பற்றி ஒத்தி வைக்கப்பட்ட பேச்சுவார்த்தை மீண்டும் ஆரம்பிக்கப்படும் என்றும்

இது சம்பந்தமான பேச்சுவார்த்தை தொடர்ந்து 29 ஆம் திகதி, டிசம்பர் 3 ஆம் திகதி, டிசம்பர் 5 ஆம் திகதிகளில் நடைபெறும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.